1982 செப்டம்பர் 10] [திரு. ச. இராமச்சந்திரன்]

ஆனால் அதே நேரத்தில், ஒரு பொருளின் மீது எவ்வளவு வரியினைப் பெற முடியுமோ அந்த வரியினைப் பெறுவதற்குப் பல வகைகள் இருக்கின்றன, சில வகைகளின் மூலம் பெற்றால் மாநிலங்களுக்குத் தர வேண்டும். வேறு சில வகைகளின் மூலம் பெற்றால் மத்திய அரசே வைத்துக் கொள்ளலாம். அதாவது டாக்ஸ் பொடென்ஷியல் என்று சொல்வார்கள். மத்திய அரசு தானே வைத்துக் கொள்ளுகின்ற அந்த வகைகளின் மூலம் முழு அளவுக்கு வரி போட்டு எடுத்துக் கொண்டும், மாநில அரசுகளுக்கு அந்த டாக்ஸ் பொடென்ஷியலைக் குறைத்துக் கொண்டும் வருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு எல்லா மாநிலங்களாலும் சொல்லப்பட்டு வருகிறது. அதைச் சரிவர உணர்ந்து மத்திய அரசு செயல்படும் என்று நம்பி, இத்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி; ''நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப் பெற்ற 1982-ம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்தி ஆறாவது திருத்த) சட்ட முன்வடிவினால் செய்யக் கருதப் பெற்றுள்ள, இந்திய அரசியல் அமைப்பின் 368-வது பிரிவின் (2) பகுதியின் வரம்பு நிபந்தனையின் கீழ் வரும் திருத்தங்களுக்கு, இப்பேரவை ஏற்பளிக்கின்றது.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை அலுவல் வரிசை மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30, உள்விதி (3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 11, அரசினர் தனித் தீர்மானங்கள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். 3 மற்றும் வரிசை எண். 4 ஆகியவற்றின் மீதான விவாதத்தை ஒத்தி வைத்து மற்ற இனங்களை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS